செ.வெ.எண். 50/அக்டோபர் தேதி : 22.10.2016

# <u>தருமபுரி மாவட்டம்</u>

## <u>தருமபுரீ அரசினர் பொறியியல் கல்லூரியில் சென்னை அண்ணா பல்கலைக்கழக மண்டல அலுவலகம் VII - னை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.</u>




தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை அரசினர் பொறியியல் கல்லூரியில் சென்னை அண்ணா பல்கலைக்கழக மண்டல அலுவலகம் (மண்டலம் - VII) திறப்பு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தலில் அறிவித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றும் விதமாக பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பள்ளிக்கல்வித்துறைக்கென 2016-17 ஆம் ஆண்டிற்கு ரூ. 24,329 கோடியே 40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பள்ளிக்கல்வித்துறையில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் உயர்கல்வித்துறையில் சிறந்து விளங்குகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 67 புதிய கல்லூரிகளை தொடங்கி தற்போது கல்லூரிகள் நல்ல முறையில் இயங்கி கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தற்போது ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் 2 புதிய கல்லூரிகளை தொடங்கியுள்ளார்கள். மேட்டுப்பாளையத்தில் தற்போது புதிய கல்லூரி ஒன்றை தொடங்கயிருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்ததற்கு பிறகு தற்போது தான் கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் கல்லூரி தொங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் பெரும்பாக்கத்தில் 40 ஆண்டுகளுக்குப்பிறகு தற்பொழுதுதான் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தமிழகத்தில் 5 இடங்களில் இயங்கி வந்த அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை ஒன்றினைத்து அண்ணா பல்கலைக்கழகம் என்ற ஒரே அலகின் கீழ் கொண்டு வந்ததின் காரணமாக ஒரே விதமான பாடத்திட்டத்தின்கீழ் சுமார் 680 கல்லூரிகளில் பயிலும் 22,68,729 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே தேர்வு கட்டுப்பாட்டு அலுவலகத்தின் கீழ் கொண்டு வந்ததின் காரணமாக அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஒரே விதமான திருத்துதல் / மறு திருத்துதல்/ மறு ஆய்வின் கீழ் கொணரலாம். தேர்வுகளை ஒழுங்காகவும், சிறப்பாகவும் எழுதும் பொருட்டு அண்ணா பல்கலைக்கழகம் தேர்வு நடத்தும் இடங்களை பல்வேறு மண்டலங்களாக பிரித்து அவற்றில் ஒவ்வொன்றிருக்கும் மண்டல ஒருங்கிணைப்பாளர், மண்டல அலுவலர் அமர்த்தி சிறப்பாக பணியாற்றி வருகிறது. முதலில் சுமார் 10 மண்டலங்களை கொண்டு நடத்தப்பட்ட தேர்வுகள் இன்று 23 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அவற்றின் மூலம் நடத்தப்படுகிறது. அவற்றின் ஒரு பகுதியாக மாணவர்களின் வசதிக்கேற்ப சேலம் மண்டலத்தின் கீழுள்ள பல கல்லூரிகளை ஒருங்கிணைத்து தருமபுரி என்ற புது மண்டலமாக உருவாக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தின் கீழ் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 23 பொறியியல் கல்லூரிகள் (மண்டலம் -VII) கீழ் இயங்கும் இதன் மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி கல்லூரிகளில் பயிலும் சுமார் 76,000 மாணவ, மாணவியர்கள் மிகுந்த பயனடைவார்கள். தருமபுரி அரசினர் பொறியியற்கல்லூரி முதல்வர் முனைவர் பெ. தாமரை அவர்கள், மண்டல ஒருங்கிணைப்பாளராகவும், முனைவர் த. சேகர் அவர்கள், மண்டல அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மண்டலத்தை புதியதாக உருவாக்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இம்மண்டலம் மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் அமைந்துள்ள இரு அரசு மற்றும் 21 தனியார் பொறியியற் கல்லூரிகளின் தேர்வு சம்மந்தப்பட்ட அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இவ்விழாவில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திரு. டி.ஆர். அன்பழகன், சென்னை அண்ணா பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் ஜி.வி. உமா, துணைக்கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் எம். இளங்கோ, அரசினர் பொறியியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் தாமரை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மீ. செல்வகுமார் மற்றும் பொறியியற் கல்லூரிகளின் முதல்வர்கள், தலைவர்கள் மற்றும் தேர்வு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.